Registered as a Newspaper in Sri Lanka

சுடுமுரசு

முரசு 2 22-2-1985 வெள்ளிக்கிழமை (மாசி 11-ஐ ஆகிர் 1) முழக்கம் 18

இலங்கை வானெலிச் செய்தி பொய் என்கிறார் ஜனர்த்தனன்

(கோயம்புத்தூர்)

இலங்கை வானெலி தவருன தகவல்களை மக்கள் மத்தியில் பரப்பி மக்களைக் குழப்பத்திலாழ்த்த முனைகிறது என்று உலகத் தமிழ் இளைஞர்பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனர்த்தனன் கூறியுள்ளார் என சென்னை வானெலி நேற்றுப் பிற்பகல் அறிவித்தது. தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. ஏ. அமிர்தலிங்கம் கோயம்புத்தூரில் உள்ள அகதிகள் முகாமுக்குச் சென்றதாகவும் அங்கு அகதிகள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர் என்றும் இலங்கை வானெலி ஒலிபரப்பிய செய்தி பொய்யானது என்று டாக்டர் ஜனர்த்தனன் தெரிவித்துள்ளார். கோயம்புத்தூரில் அகதிகள் முகாமே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இந்திய கடலோர கூட்டு ரோந்துக்கு தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். பலத்த எதிர்ப்பு

(சென்னை)

"இந்திய அரசும், இலங்கை அரசும் இணைந்து ராமேஸ்வரம் கடலெல்லையை கண்காணிக்க வேண்டுமென இலங்கை வெளியுறவு அமைச்சர் கூறியுள்ள யோசனைக்குத் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.

"இந்த யோசனை ஆபத்தானது என்றும், இலங்கைக் கடற்படையினர் செய்யும் வரம்பு மீறிய செயல்களுக்கு இந்திய அரசின்மீது பழிபோட இந்த யோசனை வழிவகுக்கும்" என்றும் அவர் சொன்னார்.

இதைக் கருத்தை முதலமைச்சர் எம். ஜி. ஆர். மின்துறை அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரன்மூலம் இந்திய வெளியுறவுக் கொள்கைக் குழுவின் தலைவர் திரு. ஜி. பார்த்தசாரதியிடம் எடுத்துரைத்துள்ளார்

இதுபற்றித் தான் பரிசிலிப்பதாகத் திரு. பார்த்தசாரதி கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி இந்திய மத்திய அமைச்சரும் தீர்க்கமான முடிவெதுவும் எடுக்கவில்லை.

★ தீவிரவாதிகட்கு பயிற்சி அளிக்கப்படுவதென்ற

ஜனதிபதியின் குற்றச்சாட்டுக்கு இந்தியா உடனடியாக மறுப்பு!

கூட்டு ரோந்து யோசனையை உடனடியாக பரிசிலிக்க முடியாது எனவும் அறிவிப்பு

இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா ஆயுதமும் பயிற்சியுமளிப்பதாகவும், அவர்களின் முகாம்கள் அங்கிருப்பதாகவும் ஜனதிபதி ஜெயவர்த்தன தெரிவித்த குற்றச்சாட்டுகளை இந்தியா உடனடியாக மறுத்துள்ளது. "இந்தியா ஏற்கனவே பல தடவைகள் இதனை மீண்டும் மீண்டும் மறுத்த போதிலும் இலங்கை ஜனதிபதி மீண்டும் அதே குற்றச்சாட்டைத் தெரிவித்திருப்பது கவலையை அளிப்பதாக இருக்கிறது" என்றும் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சின்செயலாளர்ரபேஷ் பண்டாரிநேற்றுபுதுடில்லியிலுள்ள இலங்கைத் தூதுவர் திரு. பொன்னட் திலகரத்தினவைத் தமது அலுவலகத்துக்கு அழைத்து ஜனதிபதியின் குற்றச்சாட்டுத் தொடர்பான தமது அரசின் மறுப்பைத் தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைக்கால அரசியல் போக்குகள்குறித்து பராதம் குறிப்பாகக் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவித்த திரு. ரமேஷ் பண்டாரி, தமிழ்நாட்டில் தீவிரவாதிகளுக்கான பயிற்சி முகாம் எதுவும் இல்லையென்று

-4ம் பக்கம் பார்க்க

ஜி. சி. ஈ. விசேஷ பரீட்சை

மாணவர் அனுமதி அட்டை 25க்கு முன்னர் கிடைக்கும்

அடுத்த புதன்கிழமை ஆரம்பமாகும் ஜீ சி ஈ விசேஷ பரீட்சைக்குத் தோற்றும் யாழ்மாவட்ட மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாழ்ப்பாணம் கல்வி அலுவலகத்தினூடேயே வழங்கப்படும்.

இதற்கான சகல பத்திரங்களும் பரீட்சைத் திணைக்களத்தினால் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளன பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களைக் கொண்ட பாடசாலை அதிபர்கள் கல்வி அலுவலகத்துக்கு நேரடியாக வந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாமென்று கேட்கப்பட்

—4-ஆம் பக்கம் பார்க்க

வெறுங் கையுடன் திரும்பினர்கள்

யாழ். நகரிலுள்ள முக்கிய மான பெண்கள் கல்லூரிக்கு நேற்றுக் காலை ஆயுதபாணிகளாகச் சென்ற ஐந்து இளைஞர்கள் தாம் எதிர்பார்த்துக் சென்ற பணமோ அல்லதுபெறு

—4-ம் பக்கம் பார்க்க

சீருடையினர் சிற்றத்தால் ட்ராக்டர் எரிந்தது

(கன்னியங்காடு)

வீதித்திருத்தவேலையில் இரவு நேரம் ஈடுபட்டிருந்த இளைஞர்கள், வீதியில் சீராக வந்த வாகனங்களைக் கண்டு ஒடி ஒழித்துவிட்டனர். இதனால்

—4ம் பக்கம் பார்க்க

துப்பாக்கி ஏந்திய இளைஞர் காட்சிப் பொருளாகினர்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள வார்ட் ஒன்றுக்குள் நேற்று முன்தினம் புகுந்து, துப்பாக்கியுடன் கலாட்டா கெய்ததாகக் கூறப்படுபவர், சில இளைஞர்களால் நேற்று மடக்கிப் பிடிக்கப்பட்டார். அதன் பின்னர் ஆஸ்பத்திரிக்கு அண்மையிலுள்ள கம்பமொன்றுடன் பிணைத்துக் கட்டப்பட்ட இவ்விளைஞர் பொது மக்களின் காட்சிப் பொருளாக நிறுத்தப்பட்டிருந்தார்.

சம்பந்தப்பட்டவரைக்கைது செய்த இளைஞர்கள் விதித்த

—4-ஆம் பக்கம் பார்க்க

ஈழத்தமிழ் அகதிகளுக்கு 357 ரூபா பணமும் அரிசியும்

(ராமேஸ்வரம்)

செங்கல்பட்டுசென்றிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பங்களின் எண்ணிகையைப் பொறுத்து 110 ரூபாவிலிருந்து 357 ரூபா வரை உதவிப்பணமாக வழங்கப்படுவதுடன், கிலோ 57 பைசா வீதம் அரிசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மண்டபம் முகாமிலிருந்து 723 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று செங்கல்பட்டு மாவட்டத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இங்குள்ள

— 4-ம் பக்கம் பார்க்க

நீதி மன்றங்களில் சட்டத்தரணிகள்

யாழ்-நீதிமன்றத்தில் நேற்று முதல் சட்டத்தரணிகளைக் காணக் கூடியதாக இருந்தது. கடந்த சில நாட்களாக நீதி மன்றம் செலலாது இவர்கள் பகிஷ்கரிப்புல் ஈடுபட்டிருந்தது குறிபபிடத்தக்கது.

புலிகளின் அறிக்கை : "கொக்கிளாய் தாக்குதலில்

134 இராணுவ வீரர்கள் மரணம்!" இராஜாங்க அமைச்சு மறுக்கிறது!

கொக்கிளாய் ராணுவ முகாம் மீது சென்ற வாரம் நடத்திய தாக்குதலில் 134 துருப்புகள் கொல்லப்பட்டதாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேறறு சென்னையில் தெரிவித்துள்ளனர். இத்தாக்குதலின் பின் கொக்கிளாய், திரியாய் ஆகிய இடங்களிலுள்ள முகாம்கள் மூடப்பட்டு அங்கிருந்தோரனைவரும் பதவியா பிரதான முகாமுக்கு மாற்றப்பட்டனர் என்றும் இவர்கள் பத்திரிகை குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

ஆதேவேளை பெபரவரி 13ம் திகதி சுமார் ஐந்து மணிநேரம் நடந்த இத்தாக்குதலில் முகாமிலிருந்த 106 பேர் கொல்லப்

—4ம் பக்கம் பார்க்க

பத்து வருட சேவை முடித்த ஆசிரியருக்கே யாழ். மாவட்ட இடமாற்றம் கிடைக்கும்

(தொழும்பு)

தமிழ் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியல் மார்ச் மாதம் முதல் வாரத்துக்கு முன்னர் வெளிவருமென்று கல்வி அமைச்சு அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

வழக்கமாக ஆறு வருட சேவையைப் பூர்த்தி செய்பவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட போதிலும், இம் முறை பத்து வருடங்களாக வெளிமாவட்டச் சேவை செய்தவர்களுக்கு மட்டுமே யாழ். மாவட்டத்திற்கு இடமாற்றம் வழங்கப்படவிருப்பதாகத்

—4ம் பக்கம் பார்க்க

கொள்ளைகளின் எதிரொலி:

தெல்லிப்பளை கூட்டு. சங்கம் இன்று பூரண கதவடைப்பு

"இன்றைய நிலையில தினசரி நடைபெற்று வரும் கூட்டுறவுச் சங்கக் கொள்ளைகளினால் எமதுமக்களே முற்றுகப்பாதிப்புக்குள்ளாகின்றனர், தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கம் பல துறைகளிலும் மக்களுக்குச் சேவை யாற்றி வருகின்றதை யாவரும் நன்கறிவர். இத்தாபனமும் அடிக்கடி கொக்கமாகவும் பொருட்களாகவும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலமை தொடர்ந்து ஏற்பட்டு வருவதாலல் எமது சங்

—4ம் பக்கம் பார்க்க

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் புதிய யோசனை:

அரசியல் வாதிகளல்லாத நடுவர்கள்கூடி இந்தியாவின் உதவியைப் பெறவேண்டும்

(கண்டி)

அரசியல் வாதிகளல்லாத பொதுமனிதர் சிலரை நடுவர் களாக்கி அவர்கள் மூலம் இந்திய அரசுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் உதவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அஸ்கிரிய பீடாதிபதி வண. சந்தானந்த தேரோவிடம் உரையாடிய போதே ஸ்ரீமாவோ இவ்வாறு கூறியுள்ளார்.

பேச்சுக்களின் பொழுது இரு பகுதியினரும் ஆயுதங்களை கீழே போட்டுவிடவேண்டும் என்றும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நடைமுறைப்படுத்தக் கூடியதுமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமெனறும் திருமதி பண்டாரநாயக்கா எடுத்துக் கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தை எதிர்க்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியாகவே முடிந்தனவென்றும் சொல்லப்போனால்நிலைமைகள் இன்னும் மோசமாக்கவே உதவின என்றும் ஸ்ரீமாவோ சுட்டிக் காட்டியுள்ளார்.

அஸ்கிரிய பீடாதிபதி வண. சந்தானந்த தேரோ கருத்துத் தெரிவிக்கையில் அமிர்தலிங்கம் போன்ற கூட்டணித் தலைவர்களால்கூட பயங்கரவாதிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் இதனால் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பாழாகி சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கும் சவால் விடப்பட்டுள்ளதென்றும்குறிப்பிட்டார்.

✱ கதிர்காமவளம் மரியதாஸ் தேவமலர் தம்பதிகளின் மகள் டெனிஸ்மெல்டா இன்று தனது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்

✱ ஏழாலை மேற்கு கணேசன் ரோஸ்மலர் தம்பதிகளின் மகன் விஜயராஜ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ வட்டுக்கோட்டை மயில்வாகனம் சத்திய பூரணம் தம்பதிகளின் மகள் கிருத்திகா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ திருநெல்வேலி ரவீந்திரன் பிறேமாவதி தம்பதிகளின் மகள் துவஜினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ் கொழும்புத்துறை வீதி பஞ்சாச்சரம் கனகாம்பிகை தம்பதிகளின் மகன் பார்த்தீபன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✱ யாழ் பொலிஸ் விடுதி செல்வகாந்தன் நளாயினி தம்பதிகளின் மகள் பவித்திரா இன்று தனது நாலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ நெடுந்தீவு அன்னலிங்கம் மாணிக்கம் தம்பதிகளின் மகன் இந்திரராஜா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✱ வவுனியா விஜயராசா சுகந்தி தம்பதிகளின் மகன் விஜபதன் இன்று தனது எட்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

தொலை தொடர்பு சீர் குலைவு

(கைதடி)

சாவகச்சேரிப் பகுதியில் தொலை பேசிச் சேவை மிகவும் சீர்கேடாகஇருப்பதைக்காணக் கூடியதாக விருக்கின்றது. இதன் நிமித்தம் தொலைபேசிப் பாவனையாளர்கள் தமது தொலைபேசியைக் கழற்றி வைத்திருக்கின்றனர்.

யாழ். பொது நூலகத்துக்கு

தமிழ்நாடு தந்த நூல்கள் தலைநகரில் தேங்கியுள்ளன

எரிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்திற்கு தமிழ்நாடு அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட புத்தகங்களில் பெரும்பகுதி இரண்டு வருடங்களாக கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் தேங்கிக் கிடப்பதாகவும், இன்னொரு தொகுதிப புத்தகங்கள் சென்னையிலிருந்து அனுப்பப்படாமலேயே இருப்பதாகவும் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ கே. சிவஞானம் தெரிவித்தார்.

முப்பத்தியேழு பெட்டிகளில் அடைக்கப்பட்டுள்ள சுமார் மூவாயிரம் புத்தகங்கள் கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் இருப்பதாகத்தெரிவித்த ஆணையாளர், இப்புத்தகங்களைப் பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்குமாறு சென்றவாரம் இந்தியத்துணைத் தூதுவர் கே. ஆர். சிங்ஹாவைச் தான் சந்தித்த போது கேட்டுக்கொண்டதாகத் தெரிவித்தார். தேசிய பந்தோபஸ்து அமைச்சு மூலம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் இவற்றை மாநகர சபையே யாழ்ப்பாணம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் என்று தான் அப்போதுகூறியதாகவும்ஆணையாளர் சொன்னார்.

பேராயர் அம்பலவாணர் வேண்டுகோள்:

அரச பயங்கரவாதத்தால் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்!

(நல்லூர்)

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் சமீப காலமாக நடைபெற்று வரும் அரச பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்தும், குடும்பத்தவர்களை இழந்தும், தொழில்களை இழந்தும், அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் நல்வாழ்வுக்கான ஆக்கபூர்வமான நிவாரண வேலைகளைசங்கம் மேற்கொள்ள வேண்டுமென்றும், இப்பணிகளுக்கு வேண்டிய நிதியுதவிகளை உலக கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலிருந்து பெறக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடன் வேண்டிய நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குப்படியும் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண அத்தியட்சராதீனப் பேராயர் பேரருட் திரு டி யே அம்பலவாணர் யாழ் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் பொது நிர்வாக சபைக் கூட்டத்தில் அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் திரு ஜே கி அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேராயர் தொடர்ந்து பேசுகையில் மிகவும் பாதிக்கப் பட்ட நிலைமையில் இருக்கும் வடக்கு- கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பகுதிகளில் பணிபுரியும் திருச்சபைகளின் குருமார்களோடு தொடர்பு கொண்டு விபரங்களைப் பூரணமாகச் சேகரித்து நிவாரணப் பணிகளை அப் குதிகளில விரிவான முறையில் மேற்கொள்ள சங்கம் உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டார்.

"உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள இலகடிக் கிராமத்தில் வாழும் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க ஒரு கிணற்றை அமைத்து அதிலிருந்த குழாய் மூலம் நீர் வழங்க நடவடிக்கை எடுப்பதென்றும்" தீர்மானிக்கப்பட்டது.

2-வது பிறந்ததின வாழ்த்து

செல்வன் சுஜீபன்

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சருணதேவன் சிவா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுஜீபன் இன்று தனது இரண்டாவது பிறந்ததினத்தை வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, பூட்டி, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சவுந்திராசன் சித்தப்பா அன்ரிமார், அத்தை காந்தினி அன்ரி, அக்காமார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் முருகன் அருளால் சகல செல்வங்களையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்

வித்தியாலய விழாவில் பேச்சு:

இராமகிருஷ்ணரின் தத்துவ ஞானங்களை மாணவர் அறியவேண்டும்!

"பாரத புண்ணிய பூமியில் தோன்றிய பல ஞானிகளில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரும் ஒருவர். அவரது புனிதமான வாழ்க்கை நமக்கு ஒரு எடுத்துக்காட்டு. அவரது தத்துவ ஞானங்களை நாம் கேட்பது மட்டுமல்ல அறிந்து வைத்திருக்க வேண்டும். பாடசாலைப் பிள்ளைகள் முக்கியம் அவரைப் பற்றி அறிய வேண்டும்" இவ்வாறு வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் ஜயந்தி விழாவில் சிறப்புரையாற்றிய பண்டிதர் நமசிவாயம் கூறினார்.

வித்தியாசாலை அதிபர் திரு. சிவசரவணபவன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் முன்னாள் அதிபர் திரு எஸ். அம்பிகைபாகன் பேசுகையில் "பல பெரியார்கள் கலந்து கொண்ட விழாக்கள் நிகழ்ச்சிகள் நடைபெற்ற இப்பாடசாலையில் இன்றைய காலகட்டத்தில் இது நடப்பது பராட்டத்தக்கது. பலவற்றிலும் வளர்ந்து வரும் இப்பாடசாலை தற்பேதைய அதிபரைப் பராட்டி, சகலரும் அவருக்கு ஒத்துழைக்கும்படி" அவர் வேண்டினார்.

செல்வி மனோரதி உப அதிபர் திரு எஸ் இராமலிங்கம் எஸ் சந்தோசம் ஆகியோரும் பேசினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

பொருட்கள் இடமாற்றம்

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உபஅலுவலகங்களின் மின்சார உபகரணங்கள் வழங்கும் கன்னகம் களஞ்சியத்தில் கடந்த சில காலமாக அடுத்தடுத்து நடைபெற்றுவரும் கொள்ளைகளைத்தடுத்து, அங்கிருந்த மிகுதியான பல லட்சம் ரூபா பெறுமதியான மின் உபகரணப் பொருட்கள் பாதுகாப்புக்காகவேறு இடத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டன.

துக்கா துரந்தரி தங்கம்மா:

சமய இலக்கியங்களில் இன்று இலகு நடைமுறை தேவை

(ஏழாலை)

சைவசமய இலக்கியங்களில் பெருமை வாய்ந்தது பெரிய புராணம். சிறப்பாக எமது சமயத்துறைகளையும், பொதுவாகத் தமிழ்ப் பண்பாட்டினையும் நயம்பட நவில்வது பெரிய புராணம், அன்றும், இன்றும் என்றும் விரும்பிக் கற்றலும், கற்பதும் கற்க வேண்டியதும் அதுவே!"

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெல்விப்பழைபாலர் ஞானோதய சபையின் 38 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் 'பெரிய புராணச் சுருக்கம்' நூலை வெளியிட்டு வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

பண்டிதர் இ. நமசிவாயம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி மேலும் பேசியதாவது: சமய இலக்கியங்களின் அருமையும் பெருமையும் அறிவோர் தொகை அருகிவருவது தவிர இலகு நடையிலும், எளிய முறையிலும் அவை எமது இன்றைய சந்ததிக்கு அறிமுகப்படுத்தப்படவேண்டும். விஞ்ஞானமும், சமயமும், பொருளியலும், வாழ்க்கையும் எவ்வாறு சைவசமயத்திற் பொருந்தியுள்ளன என்பதனை மக்கள் அறியச் செய்வதன் மூலமே உண்மையான சமயத் தொண்டு பரிமளிக்கும்.

இவ்விழாவில் திரு. நம. சிவப்பிரகாசம், பிரம்மஸ்ரீ வ. குகசர்மா உட்பட்ப் பலரும் பேசினர்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

வரி விளம்பரம்

சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகிய காலத்தில் Processing and Printing செய்து கொள்ள நாடுங்கள்-கொழும்பு ஸ்ரூடியோ யாழ்ப்பாணம்.

விற்கவும்-வாங்கவும்

கமராக்கள்- றேடியோக்கள்- ரீவிக்கள்-ஸ்ராண்டுகள் குளிர் சாதனப்பெட்டிகள் விற்கவும்- வாங்கவும் தினமும் வாருங்கள் ஏலவிற்பனை நிலையம் கோப்பாய்.

தவறிவிட்டது

அன்ரன் டேவிற் 6402522 86V என்ற ஓலக்க அடையாள அட்டை கோப்பாய்- குருத்துறை வீதியில் போர்சன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் ஈழமுரசு அலுவலகத்தில் தயவு செய்து ஒப்படைக்கவும்.

பிறந்தநாள் வாழ்த்து

செல்வன் - ரசிகரன்

நல்லூர் அரசடி 1ம் ஒழுங்கையைசேர்ந்த சிவபாலன்-, புனிதவதி தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் ரசிகரன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (22-02-85) நல்லூரில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா பெரியப்பா குடும்பத்தினர் சித்தப்பாமார், அத்தை, அப்பையா, பெரியமாமாகுடும்பத்தினர் அம்மம்மா, மாமாமார், ஜேர்மனி மாமா சித்திமார் மற்றும் உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

உதய சிந்தனை

எவ்வாறு மண்டி எரிகின்ற தீ விறகைச் சாம்பலாகச் செய்யுமோ அவ்வாறே ஞானத் தீ எல்லாக்கருமத்தையும் சாம்பலாகச் செய்துவிடும்.

- பகவத் கீதை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி : 23336

இதயஒலி

22-2-85 வெள்ளிச்கிழமை (இரத்தாக்ஷி மாசி 11)

முடியாது என்று சொல்ல முடியாது!

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரவில் அமைந்துள்ள பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்றினை அதிஉத்தம ஜனதிபதி நிகழ்த்தியுள்ளார்.

ஜனதிபதியின் உரையின் பெரும் பகுதியினையும் தமிழ் பகுதி நிகழ்வுகளும், கூட்டணியினரின் போக்கும், தீவிரவாதிகளின் நடவடிக்கைகளும், பாரதம் வகித்து வரும் பங்குமே ஆக்கிரமித்தமையை கவனிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஏதாவதொரு திட்டத்தை இவ்வைபவத்தில் அதி உத்தமர் அறிவிப்பாரென்று பலரும் எதிர்பார்த்திருந்த வேளையில், தீர்வு எதனையும் தெரிவிக்காது, பிரச்சினையை மட்டுமே அவர் குறிப்பிட்டு தனது உரையினை முடித்து விட்டமை ஓரளவுக்கு ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது எனலாம்.

இந்த நாடு இன்னமும் ஒற்றையாட்சியின் கீழ் தான் இருக்கின்றது என்பதையும், அதி உத்தமரே வடக்கு கிழக்கு அடங்கிய முழு நாட்டுக்கும் தலைவராக ஆட்சி புரிந்து வருகின்றார் என்பதையும் மனதிற்கொண்டு பார்த்தால், சிறுபான்மையினரின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியது அவரது தலையாய கடமை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

தமிழ் மக்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத்தில், ஜனதிபதி நேற்று முன்தினம் நிகழ்த்திய உரை தமிழ் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் பற்றிய ஒரு தொகுப்புரையாக அமையாது, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் விளக்க அறிக்கையாக அமைந்திருந்தால் அனைவருமே மகிழ்ந்திருப்பர்.

மூன்று தீவிரவாதக் குழுக்கள் பொதுவான இராணுவத் திட்டமொன்றின் கீழ் இணைந்துவிட்டனவென்றும், மறைந்திருந்து ராணுவத்தைத் தாக்கும் 'கெரில்லா' நடவடிக்கைகளை கைவிட்டு இலங்கை இராணுவத்துடன் நேரடியாக அவர்கள் மோதுவதற்குத் தயாராகிவருகின்றனர் என்றும், இறுதியான தீர்க்கமான போராட்டமொன்றுக்கு அவர்கள் தம்மைத் தயார் படுத்தி வருகின்றனர் என்றும் பல முக்கியமான தகவல்களை அல்லது தீவிரவாதிகள் சம்பந்தமான இரகசியங்களை ஜனதிபதி அம்பலப்படுத்தியுள்ளார்.

இந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தமக்குக் கிடைத்த நம்பிக்கையான தகவல்களை, இந்த நாட்டின் அதி உயர்ந்த மன்றமாக அமைந்துள்ள பாராளுமன்றத்திற்கு ஜனதிபதி அவர்கள் அறிவித்தமையை எவரும் பிழையென்று சொல்லமுடியாது.

சரியெனப்பட்டமையை, சரியான இடத்தில், சரியான நேரத்தில் சொல்ல வேண்டியது அரசியல் தலைவர்களின் கடமை,

அதே வேளையில், இனப்பிரச்சினைக்கு சரியான ஒரு தீர்வை, மிகச்சரியான இடமான பாராளுமன்றத்தில் ஜனதிபதி நிச்சயம் தெரிவிப்பார் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது.

"தமிழ் நாட்டில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள் என்றும் பாரதம் அவர்களுக்குப் பயிற்சியும் பாதுகாப்பும் கொடுக்கின்றது என்றும் மீண்டும் மீண்டும் பழிசுமத்துவதால் என்னவிடைக்கப் போகின்றது?"

"தமிழர் கூட்டணியினர் சர்வ கட்சி மாநாட்டின் முடிவுகளை நிராகரித்து விட்டனர். அவர்களால் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு இழுபறியில் இருக்கிறது" என்று அடுத்தடுத்துச் சொல்லுவதால் என்ன நடைபெறப்போகின்றது?

ஒருபகுதி மக்களை 'தாஜா' பண்ணுவதற்கு இவ்வாருன பேச்சுக்கள் தேவையானவையாக இருக்கலாம். ஆனால் மற்றொரு பகுதி மக்களின் பிரச்சினைகளை இப்பேச்சுக்களால் தீர்த்துவிட முடியாது.

தீவிரவாதிகளின் திட்டங்களைத் துப்புத்துலக்கி அம்பலப் படுத்தும் அதி உத்தம ஜனதிபதி அவர்களால் தமிழ் மக்களின் அபிலாஷைகளையும் துப்புதுலக்கி அவைகளை நிறைவேற்றி வைக்க முடியாதா?

சகல நிறைவேற்று அதிகாரங்களும் கொண்ட, தெரிந்தெடுக்கப்பட்ட ஜனதிபதியினால் முடியாது என்று சொல்ல முடியாது?

'மனமுண்டானால் இடமுண்டு,'

அதிபர்- எதிரணி முரண்பாட்டினால்

பங்களாதேஷில் அரசியல் நெருக்கடிநிலை முற்றுகிறது!

(டாக்கா)

பங்களாதேஷில் ஏப்ரல் மாதம் ஆரும் திகதி பொதுத்தேர்தல் நடுநிலைமையுடன் நடைபெறும் என்று அதிபர் எர்ஷாத் தொலைக்காட்சி மூலமும் வானொலி மூலமும் நாட்டு மக்களுக்கு அறிவித்துக் கொண்டிருந்தவேளை தலைநகர் டாக்காவில் எதிர்கட்சிகள் பொதுத் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ற தமது நிலையில் மாற்றமே இல்லை என மக்கள் மத்தியில் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டிருந்தன என அறிவிக்கப்படுகிறது.

நாட்டு மக்களுக்கு அதிபர் விடுத்த வேண்டுகோளில் "அரசு முற்றிலும் நடுநிலையுடன் பொதுத் தேர்தலை நடாத்தும் இது அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். எல்லா எதிர்க்கட்சிகளும் பொதுத்தேர்தலில் பங்கேற்று, வேட்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டிய தினத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

ஆயினும் அதிபரின் இவ் வேண்டுகோளைத் தாம் புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிக் கூட்டணிகள் உறுதியாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளன.

அதிபர் வானொலி தொலைக்காட்சியில் உரை நிகழ்த்திய இம்மாதம் இருபத்தோராம் திகதி பங்களாதேஷின் வரலாற்றுப் புகழ் மிக்க ஒரு நினைவு நாள் என்றும் டாக்கா அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அகதிகளிடம்

'அதிகாரிகள்' வேஷத்தில் மோசடிகள் நிகழ்கிறதாம்

(ராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து வரும் தமிழ் அகதிகளிடம் உள்ள பொருட்களைச் சில தேச விரோத சக்திகள் அங்கு அதிகாரிகள் போல் நடித்து மோசடி செய்து வருவது அம்பலத்துக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

வரிவிதிப்புக்குரிய கலர் தொலைக்காட்சிப் பெட்டி முதலானவற்றை அகதிகள் கொண்டு வருவதாகவும் அவற்றைச் சுங்க அதிகாரிகள்போல் நடித்து மோசடி செய்து விடுவதாகவும் தெரியவந்திருப்பதாக சுங்க இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இப் பொருட்களை விற்கவேண்டாம் என அவர் அகதிகளுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளார்.

அகதிகளுக்குச் சாத்தியமான உதவிகள் அளிக்கப்படுவதாகவும் ஆயினும் முரண்பாடான செயதிகள் வெளியாவதாகவும் அரசு அதிகாரி ஒருவர் கூறினார்.

சர்வதேச போட்டி

பாரதம் தயாராகிறது

(புதுடில்லி)

சர்வதேச ரீதியிலான தொழில் போட்டியைச் சமாளிக்கப் பாரதம் தயாராக வேண்டும் என்று நிதிமந்திரி திரு.வி. பிரதாப்சிங் புதுடில்லியில் நடைபெற்றவிழா ஒன்றில் பேசுகையில் கேரிக்கை விடுத்தார்.

சர்வதேசத் தொழில் போட்டிக்கு ஈடுகொடுக்க தொழில் துறை முழுமை வளர்ச்சி பெற வேண்டும் என்று கூறிய மந்திரி சில நாடுகளின் வர்க்தகப் பொருளாதாரத் கொள்கை சிறப்பானதல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

மண்டபம் பகுதியில்

ரூ. ஐந்து இலட்சம் செலவில் அகதிகளுக்கான பந்தல்கள்

(ராமேஸ்வரம்)

இலங்கையில் இருந்து வரும் அகதிகளுக்கென மண்டபத்தில் ஐந்து இலட்சம் ரூபா செலவில் பந்தல்கள் அமைக்கப் படுகின்றன

இதே வேளை புதன்கிழமை மட்டும் 791 அகதிகள் இலங்கையிலிருந்து வந்தனர். இலங்கைக் கடற்படையினர் வழியில் சுட்டதாகவும் மூன்று படகுகள் தப்பி வந்துவிட்டன என்றும் பதினைந்து பேர் பிடிபட்டு விட்டனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக சென்னை வானொலி நேற்றுத் தனது செய்தியறிக்கையில் தெரிவித்தது.

டில்லி மாநாட்டுப் பிரகடனம்

உலக சமாதானத்துக்கு உதவ வேண்டும் - ஐ. நா. செயலர்

(நியுயோர்க்)

புதுடில்லியில் சமீபத்தில் பாரதம், ஆர்ஜன்டீனா, சுவீடன், மெக்ஸிக்கோ உட்பட ஆறு நாடுகள் கலந்துகொண்டு ஆயுதப் பரிகரணம் தொடர்பாக நடத்திய உச்சி மாநாட்டின் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர்திரு.குவெல்லரால்பெரிதும் பாராட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான பாரதத் தூதுவர் திரு. கிருஷ்ணன் தலைமையில் மேற்படி நாடுகளின் தூதுக்குழு ஒன்று நேற்று அவரைச் சந்தித்தது மேற்படி உச்சி மாநாட்டுப் பிரகடனம் குறித்து விவாதித்த போதே தெரிவிக்கப்பட்டது.

நீடித்த சமாதானத்துக்கும் மனிதகுலத்தைவாட்டும் அணு ஆயுத அச்சத்தைத் தவிர்க்கவும் இப்பிரகடனம்உதவ வேண்டும் என்று ஐ. நா. செயலாளர். ஆவல் வெளியிட்டார்.

பிரதமர் ராஜீவ் எச்சரிக்கை

கறுப்பு பணம் வேரோடு சாய்க்க தீவிர நடவடிக்கை

(புதுடில்லி)

"கறுப்புபணத்தை வேரோடுகளைய அரசு மும்முனைத் திட்டம் ஒன்றினைத் தீவிரமாகச் செயற்படுத்தவுள்ளது. அதற்காக சில ரூபா நோட்டுக்களை செல்லாததாக்கிவிட வேண்டும் என்ற யோசனை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல" என்று பிரதமர் திரு ராஜீவ் காந்தி பம்பாய் வார இழுழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருக்கிறார்.

"கட்சித் தாவலைத் தடுக்க சட்டம் கொண்டு வந்தது போல் கறுப்புப்பண ஒழிப்புக்கும், கள்ளச் சந்தைக்கும் எதிராகவும் சட்டங்கள் தீவிரத்துடன் செயற்படுத்தப் பட்டால் அவை எப்படி வெற்றி பெறுது போகும்?" என்று வினவினர் பிரதமர்.

தனது அரசு காந்திஜி நேருஜி அன்னை இந்திரா வழியில் செயற்படும் என்று கூறிய பிரதமர் பஞ்சாப் பிரச்சினை குறித்தும் பிரஸ்தாபித்தார்.

"அகாலிதள் உடன் பேச நான் தயாராக இருக்கிறேன்; ஆனால் அவை அரசியல் சாசனத்துக்கு உட்பட்டவையாக இருக்கவேண்டும். முதலில் அவர்கள் வன்முறையாளரிடம் இருந்து விலகிக் கொள்ள வேண்டும்" என்றார் பிரதமர்.

301 பேர் போட்டியிடும்

பெல்காம் தொகுதி: 2 அடி நீள 3 அடி அகலத்தில் வாக்குச் சீட்டு

(பெங்களூர்)

முன்னெப் போதுமில்லாத வாறு 301 வேட்பாளர்கள் போட்டியிடும் கர்னாடக மாநிலத்தின் பெல்காம் தொகுதியில் இரண்டு அடி நீளமும் மூன்று அடி அகலமும் உள்ள வாக்குச் சீட்டுகள் தயாரிக்கப் படுகின்றன. இதில் வேட்பாளரின் பெயரும். சின்னங்களும் பொறிக்கப்பட்டிருக்கும்.

இத் தொகுதியில் அரசியல் கட்சியில் மூவர்போட்டியிடுகின்றனர். ஏனையோர் சுயேச்சை வேட்பாளர்களாவர்.

5 கறுப்பர் கொலை

(கேப்டவுன்)

தென்னபிரிக்க நகரான கேப்டவுன் அருகேபொலிசாருக்கும் வன்முறையாளருக்கும் இடையேஉண்டான மோதலில் ஐந்து கறுப்பர் கொல்லப் பட்டதாக அஞ்சப்படுகிறது, இச்சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளனர்.

22 . 2 . 1985 வெள்ளிக்கிழமை

சுடரொளி

மக்களுக்குப் பணிபுரியும் வங்கியில் மக்கள் அவமதிப்பு

(உடுப்பிட்டி)

பருத்தித்துறையில் மக்களுக்கு எனப் பணிபுரியும் வங்கிக்கிளை ஒன்றுபற்றி பொது மக்கள் மத்தியில் பரவலாகக் குறை கூறப்படுகிறது காசு, ஆணை போன்றவற்றிற்குக் 'கொமிஷன்' வாங்குதல் சட்டதிட்டமாக இருந்த போதிலும், வடக்கிலுள்ள ஏனைய வங்கிகளை விட அதிக 'கமிஷன்' இங்கு அறவிடப்படுவதாகக் குறை கூறப்படுகிறது அத்துடன் அனைத்து மக்களுக்கும் சரியாக மதிப்பு அளிக்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் தமது வாடிக்கை அலுவல் காரணமாகப் புகமுயன்ற மதகுரு ஒருவர் அவமதிப்புச் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

'ரெலோ'வின் கண்டனப் பிரசுரம் :

விடுதலை என்ற பெயரில் மாணவர் கல்வி பாழ்! மக்கள் உடைமை கொள்ளையா?

விடுதலை என்ற பெயரில் மாணவர் கல்வியில் கைவைப்பது, தொழிலாளர்வர்க்கத்தின் வாழ்க்கையில் விளையாடுவது, வர்த்தகரின் கொள்ளை லாபத்துக்கு வழி செய்வது, தடையற்ற வர்த்தகத் தொடர்புகளைத் துண்டிப்பது, மக்கள் உடைமைகளைக்கொள்ளையிடுவது ஆகியவைகளைக் கண்டித்து தமிழ்ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் திடீடமிட்டு தமிழ் மாணவர் பாடசாலைகளின கல்விவசதியைக் குறைத்து வருகிறது. ராணுவநெருக்கடிகளால் பெருபளவு மாணவர்கள் கல்விகற்க முடியாது தத்தளிக்கின்றனர். இந்நிலையில் தமிழ் மாணவர் கல்வியின் அவசியத்தை உணராத சில பிற்போக்குக் கும்பல்கள் பாடசாலைகளில் டி.வி.,டெக், ரேனியா இயந்திரம், தட்டச்சு, ஆய்வு கூடப் பொருட்களைக் கொள்ளையடிப்பது பாரதூரமான நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துமென 'ரெலோ' சுட்டிக்காட்டியுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் அடுத்தடுத்து கொள்ளையடிக்கப்பட்ட தால் அதனை இழுத்து மூட அரசு எண்ணியுள்ளது. இங்கு நடைபெற்ற கொள்ளைகளினால் தமிழ் மக்களே தொழில் இழக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.

கூட்டுறவுச் சங்கக்கொள்ளை தங்கநகை வியாபார நிலையங்களின் கொள்ளை, தனியார் கடத்தல்களையும் வன்மையாக எதிர்த்துள்ள ரெலோ, ஹட்டன் நாஷனல் வங்கிக்கொள்ளைக்கும் தங்களுக்கும் சம்பந்தமில்லை எனவும் அறிவித்துள்ளது.

யாழ். சென் பற்றிக்ஸ் மாணவர் அறிக்கை:

பரிசுத்தமாகத் தோன்றிய இயக்கங்களுள் விரியன் பாம்புக் குட்டிகள் விளைந்துள்ளன?

யாழ்ப்பாணம் சென் பற்றிக்கஸ் கல்லூரியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டு லட்சம் ரூபா கொள்ளை தொடர்பாக மேற்படி கல்லூரி மாணவர் குழுவினால் வெடுக்கப்பட்ட வேண்டுகோள் வருமாறு:

அடக்கி ஒடுக்கப்பட்டிருக்கும் எம்மை காப்பதற்குப் பரிசுத்தமாகத் தோன்றிய இயக்கங்களுள்விரியன்பாம்புக்குட்டிகள் விளைந்து வருகின்றன மக்களின் அத்தியாவசியத் தேவைகளில் கையை வைத்துத் தமிழ் மக்களின் வாழ்வைக் குலைக்கின்ற கயவர்கள் இன்று மாணவர் கல்வியிலும் கையை வைத்து மாணவர் சமுதாயத்தையே கழுமரத்தில் ஏற்றுகின்றனர்.

தமிழர்களாகிய நாம் இது வரையும் இப்பொழுதும் நம்பியிருப்பது கல்விச் செல்வம் ஒன்றையே. பாடசாலைப் பொருட்கள், பாடசாலைப் பணம், பரீட்சைகள் என்ற வகையில் தமிழ் மாணவர் சமூகத்தை அழித்துவருகின்ற கயவர்கள் இன்று புனித பத்திரிசியார் கல்லூரியின் சுமார் இரண்டு லட்சம் ரூபா பணத்தை துப்பாக்கி முனையில் பயமுறுத்திச் சூறையாடியுள்ளனர்.

அதிகாரிகள், ஏழைகள் என்ற வரிசையில் பணம், அரிசி, உடை என்பனவற்றையும் தானம் செய்து அவர்களின் புனர்வாழ்விற்காக தியாகம் செய்யும் மாணவர்களையும், ஏங்கும் மக்கள் புனர்வாழ்விற்காக உழைக்கும் மாணவர்களையுமுடைய எம்கல்லூரித் தாயின் பணத்தை எப்படி மனம் வந்து கைவைத்துத் தீண்டினார்களோ?

இப்பணத்தைக் கொள்ளையடித்ததால் எமது கல்லூரியின் அபிவிருத்தித் திட்டங்களும், மாணவரது கல்வி முன்னேற்றமும், நிர்வாகமும் பலத்தப்பட்ட இலட்சியங்களை எதிர்நோக்கி நிற்கின்றன. எமது அதிபரும், உப அதிபரும் அழாக்குறையாக மன்றாடிக் கேட்டும், எத்தனையோ ஏழைகளின் வியர்வைத் துளியில் உருவாகியமாணவர்களது பணத்தை அடாவடித்தனமாக அபகரித்துச் சென்றுள்ளனர்.

எமது கல்லூரி மாணவர்களின் இன்நிலையைச் சம்பந்தப்பட்டவர்கள் புரிந்துகொள்வார்கள் என நாம் நினைக்கிறோம். எனவே எமது துயரத்தைப் போக்கும்வகையில் சம்பந்தப்பட்டவர்களிடம் இரந்து கேட்பது யாதெனில் எமது கல்லூரியில் இருந்து எடுத்துச் சென்ற பணத்தை மனமிரங்கித் திருப்பித் தருமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டுகிறோம். மேலும் இவ்வகையிலான தவறுகளைச் செய்யாது இருக்கும்படி சம்பந்தப்பட்டவர்களிடம் இரந்து வேண்டுகிறோம்.

கூட்டணி இரங்கல்

மலையகத் தமிழரின் நல்வாழ்வுக்காக தன் வாழ் நாள் பூராவும் உழைத்த ஒரு ஒப்பற்ற தொழிலாளர் தலைவர் விஜயசுந்தரம் இன்றைய கால கட்டத்தில் அவரது மறைவு சிறப்பாக மலையகத் தமிழ் மக்களுக்கும், பொதுவாக ஈழம் வாழ தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும் நலிந்த சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக பல போராட்டங்களைச் சந்தித்தவர் அவர் இந்த நாட்டின் தொழிலாளர் வரலாற்றில் அவரின் மறைவால் ஏற்பட்ட இடம் மீண்டும் நிரப்பப்பட முடியாததே.

மேற்கண்டவாறு இ. தொ. கா. உபதலைவர் திரு. விஜயசுந்தரத்தின் மறைவையொட்டி தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் நிர்வாகச் செயலாளர் திரு. மு. ஆலாலசுந்தரம் விடுத்துள்ள இரங்கலுரையில் தெரிவித்துள்ளார்.

ரெனியின் பார்வையில்

நாம் இப்பொழுது நடத்தி வரும் போராட்டத்தில் இரு முறைகளில் வெற்றி பெற வேண்டியது அவசியமெனவும், பயங்கரவாதிகளுடனான போராட்டத்தில் ராணுவரீதியில் வெற்றி பெறுவதுடன், தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு அரசியல் ரீதியிலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரெனி டீமெல் நேற்று இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார்.

மாற்றமெதுவும் இடம்பெறாது

பல்கலைக்கழகப் புதிய திருத்தச் சட்டமூலம் பற்றிச் சகல தரப்பினருக்கும் பூரண விளக்கம் அளிக்கப்படுமென உயர் கல்விப் பிரதி அமைச்சர் திரு. அத்தநாயக்க பாராளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

இத்திருத்தச் சட்ட மூலத்தைத் திருத்தவோ, நீக்கவோ அல்லது பின்போடவோ அரசுக்கு உத்தேசமில்லை எனத் தெரிவித்த அமைச்சர், இதனால் பல்கலைக் கழகங்களின் இறைமை பாதிக்கப்படமாட்டாது எனவும் கூறினார்.

மகாநாடு ஒத்திவைப்பு

மணிலாவில் நடைபெறவிருந்த சர்வதேச சுதந்திர ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்து ஆசிய பிராந்திய மகாநாடு ஜூன்மாதம் 24 முதல் 28 வரை நடைபெறவிருந்த ஹோட்டல் ஒன்று எரிந்ததினால் பிறிதொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது இம்மாநாட்டில் இலங்கை தமிழாசிரிய சங்கபொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் உட்பட மூவர் கலந்து கொள்ளவிருந்தனர்.

சிறுடையினரின்..

—1-ம் பக்கத் தொடர்

கோபம் கொண்ட சிறுடையினர் கல், மண் ஆகியவைகளுடன் நின்ற டிராக்டருக்குத் தீமூட்டியதுடன், அருகிலுள்ள வீடொன்றின் யன்னல்களையும் கண்ணாடிகளையும் சேதப்படுத்திச் சென்றனர். திருநெல்வேலி கிழக்கு ஆடியபாதம் வீதியில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் டிராக்டரே எரிக்கப்பட்டது.

134 இராணுவ..

—1 ஆம் பக்கத் தொடர்

பட்டதாகவும் இவ்விடத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு இராணுவ வண்டி தாக்கப்பட்டதில் மேலும் 28 பேர் கொல்லப்பட்டதாகவும் தமது கெரில்லாவீரர்கள் 16 பேர் இத்தாக்குதலில் மரணமானதாகவும் விடுதலைப் புலிகளின் பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாக 'வெரிதாஸ்' வானொலி அறிவித்தது.

ஆனால், ராஜாங்க அமைச்சு நேற்றுமாலைவிடுத்தமறுப்பில், இச்சம்பவத்தில் 4 ராணுவவீரர்கள் மட்டுமேமரணமானதாகவும், புலிகளின் அறிக்கை பொய்யானதெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஈழத்தமிழ்..

1-ஆம் பக்கத் தொடர்

புயல் பாதுகாப்பு இல்லங்களில் அவர்கள் தங்க வைக்கப்படுள்ளனர். இவர்களுள் 79 குழந்தைகளும் அடங்குவர்.

மாணவர் அனுமதி..

—1-ம் பக்கத் தொடர்

டுள்ளனர்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் தபாலில் அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சை ஒழுங்கு சட்டத்தமான மேற்பார்வையாளர்களின் கூட்டம் கல்விப் பணிப்பாளர் எம். சிவசிதம்பரம் தலைமையில்நேற்றுமுன்தினம் தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது.

தெல்லிப்பளை..

—1-ஆம் பக்கத் தொடர்

கத்தை மூடி விடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" என இன்று கொள்ளையைகண்டித்து நடைபெறுபகதவடைப்புப் பற்றிய அறிக்கையில் தெல்லிப்பளைபிரதேசக் கூட்டுறவுச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்தும் நிலையை முன்வைத்துச் சகல வர்த்தக தாபனங்களும் இந்த அநியாயச் செயலைக் கண்டித்து தத்தம் வியாபார நிலையங்களை மூடி ஒத்துழைக்குமாறு கோரிக்கதவடைப்பு இன்று நடைபெறுகின்றது. இந்த நியாயமான நடவடிக்கைக்கு ஆதரவு நல்குமாறும் உச்சங்கம்கேட்டுள்ளது.

"தற்சமயம் காங்கேசன்துறையில் மா, சீனி, அரிசி முதலிய உணவுப் பொருட்கள் வந்தும் எமது எளிபொருள் நிலையம் கொள்ளையடிக்கப்பட்டமையால் அவற்றை விநியோகம் செய்ய முடியாதுள்ளது எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதிபதியின்..

—1-ம் பக்கத் தொடர்

பல தடவைகள் தெரிவித்த பிறகும், இலங்கை மீண்டும் குற்றஞ்சாட்டுவது வருத்தத்திற்குரியது எனவும் குறிப்பிட்டார்.

"இலங்கையின் தற்போதைய நிலைமையைஒட்டுமொத்தமாகக் கருத்திற் கொண்டே சுடலோக் கூட்டுறோந்து யோசனையைப் பரிசீலிக்க வேண்டும்" எனவும் அவர் தெரிவித்தார்.

வெறுங்கையுடன்..

—1-ம் பக்கத் தொடர்

மதியான இரசாயனப்பொருட்களோ அங்கு இல்லாததால் வெறுங்கையுடன் திரும்பினராம் சம்பளப் பணம் கிடைக்கலாமொன்று சென்றவர்கள், அக்கல்லூரியில் ஆசிரியர்கள் சம்பளம் தனித்தனிச் 'செக்'காக வழங்கப் படுவதைப் பின்னரே தெரிந்து கொண்டனராம். ஆய்வு கூட்டத்திலும் எதுவும் பெறுமதியாக இல்லாததால் அங்கும் கொள்ளை இடம் பெறவில்லை.

பத்து வருட..

—1ம் பக்கத் தொடர்

தெரிய வந்துள்ளது.

ஆறு வருட சேவையைப் பூர்த்தி செய்தவர்கள் அடுத்தாண்டில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்களாம் பாதிக்கப்பட்ட பல ஆசிரியர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்துவிட்டதாலேயே, பத்து வருட சேவை இவ்வருடம் கணிக்கப்படுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

துப்பாக்கி ஏந்திய..

—1-ம் பக்கத் தொடர்

உத்தரவுக்கிணங்க இரண்டு மணித்தியாலங்களாக அவர் கட்டப்பட்ட நிலையில், பொது மக்கள் அடையாளம் காண்பதற்காக விடப்பட்டிருந்தார் சம்பந்தப்பட்ட நபர் ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டுக்குள் அட்டகாசம் புரிந்ததால், பல கர்ப்பிணித் தாய்மார் 'கிலி' கொண்டதாகக் கூறப்படுகின்றது

எங்கள் புதிய வெளியீடுகள்

❋ ஜெயசங்கர் ❋ ஸ்ரீப்ரியா
❋ ஆனந்தபாபு நடித்த "கடமை"
(V. G. P. ORIGINAL)

❋ சிரஞ்சீவி ❋ சுஹாசினி நடித்த
"சலன்ஞ்" (V. G. P ORIGINAL)

❋ பிரேம் ❋ பூர்ணிமா நடித்த
"என் ஆசை உன்னைத்தான்"
(GALAXY ORIGINAL)

❋ ரஜனி ❋ ஸ்ரீதேவி நடித்த
"ராம் ரெபேட் ரகீம்"
(THOMSUN ORIGINAL)

உங்கள் ஓர்டர்களை உடன் பதிவு செய்து கொள்ளுங்கள். மேலும் புதிய பல வெளியீடுகளை (ORIGINAL COPIES) மிக விரைவில் எதிர்பாருங்கள்.

குணம் வீடியோ சென்டர்
42, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
தொலைபேசி . 23665

"ஈழமுரசு" காயிதபா அட்வர்டைசிங் ஆர்கனைசேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டிவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 22-02-1985 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி 23336